Register No. | | | | | | | | |

**TA5A** **7188–26**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CIVIL PROCEDURE CODE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the principles governing the grant of Temporary Injunction by the Courts.

   தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கும் போது நீதிமன்றம் கடைபிடிக்கும் கொள்கைகளை விளக்குக.

2. "Limitation bars the remedy but does not extinguish the right" – Discuss.

   "காலவரையறை தீர்வழியைத் தடுக்கின்றதே தவிர உரிமையை அழித்து விடுவதில்லை"- விவாதிக்கவும்.

3. Who is an indigent person? Describe the procedure for institution of suit by such a person.

   ஏழ்மை நிலையர் என்பவர் யார்? அத்தகையவர் ஓர் உரிமையியல் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is a Plaint? What are the particulars to be contained in a plaint?

   வழக்குரை என்றால் என்ன? ஒரு வழக்குரையில் என்னென்ன விவரங்கள் இருக்க வேண்டும்?

5. Explain the different modes of execution of a Decree.

   ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றக்கூடிய பல்வேறு வழிமுறைகளை விளக்குக.

6. State the provisions of law relating to suit by or against the corporations.

   கூட்டு நிறுவனங்களின் சார்பாகவும் எதிராகவும் தொடுக்கப்படும் வழக்குகளை முறைப்படுத்தும் சட்டக் கூறுகளை எடுத்துரைக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Counterclaim.
எதிர் பாத்தியம்.

(b) Pecuniary Jurisdiction of Civil Courts.
உரிமையியல் நீதிமன்றங்களின் நிதி வழி அதிகாரவரம்பு.

(c) Reference.
மேற்கோள் விசாரணை.

(d) Ex parte Decree.
ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை.

(e) Decree Holder.
தீர்ப்பாணை பெற்றவர்.

(f) Issues.
வழக்கெழு வினா.

(g) Computation of Limitation.
காலவரையறையைக் கணக்கிடல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Suresh files a suit against Ramesh for Rs. 27,000/- in Ranipet Court. The Court passes a decree for Rs. 2,700/-. Suresh files an application to amend the decree. Can the Court amend it?

சுரேஷ் என்பவர் இரமேஷ் அவர்களுக்கு எதிராக இராணிப்பேட்டை நீதிமன்றத்தில் ரூ. 27,000/- கேட்டு வழக்கு தாக்கல் செய்கிறார். நீதிமன்றம் ரூ. 2,700/-க்கான தீர்ப்பு வழங்குகிறது. சுரேஷ் மனு ஒன்றை தாக்கல் செய்து தீர்ப்பாணையை மாற்றக் கோருகிறார். நீதிமன்றம் அந்த மாற்றத்தைச் செய்ய முடியுமா?

9. There is a boundary dispute between Kumar and Somuraj. Kumar apprehends that Somuraj would initiate a civil action and obtain an ex parte interim order against him. Advise Kumar as to the precautionary measures to be taken.

குமாருக்கும் சோமுராஜுக்கும் இடையே எல்லை தகராறு உள்ளது. சோமுராஜ் ஒரு உரிமையியல் வழக்கை தொடர்ந்து தனக்கு எதிராக ஒருதலைப்பட்ச இடைக்கால உத்தரவு பெற்றுவிடுவார் என குமார் அஞ்சுகிறார். இந்நிலையில் குமார் அவர்கள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குக.

10. Sathish sues Suma on a promissory note for Rs. 7 lakhs. Suma already holds a judgement against Sathish for Rs. 9 lakhs. A plea of set-off is raised by Suma. Can she succeed in her plea? Give reasons.

சதீஷ் என்பவர் சுமா என்பவர் மீது கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் ரூ. 7 இலட்சம் தர வேண்டும் என வழக்கிடுகிறார். சுமா அவர்கள் ஏற்கனவே சதீஷ் தனக்கு ரூ. 9 இலட்சம் தர வேண்டும் என்ற தீர்ப்பை வைத்து, எதிரிடை வாதம் செய்கிறார். அவர் அந்த வாதத்தில் வெற்றி பெறுவாரா? காரணங்களைக் கூறுக.

Register No. | | | | | | | | |

**TA5B**

**7375–26**

(For the candidates admitted from 2017-2018 to 2021-2022)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

CRIMINAL PROCEDURE CODE

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the various Criminal Courts established under the Code of Criminal Procedure and their power to impose punishment.

   குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு குற்றவியல் நீதிமன்றங்களையும், அவற்றின் தண்டனை தரும் அதிகாரங்களையும் விளக்குக.

2. Explain the procedures to be followed by a police officer on receipt of information relating to the commission of a cognizable offence and non cognizable offence.

   பிடியாணையின்றி கைது செய்தற்குரிய குற்றம் மற்றும் பிடியாணையுடன் கைது செய்தற்குரிய குற்றம் ஒன்று புரிந்ததாக தகவல் பெற்றவுடன் ஒரு காவல் அலுவலர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்குக.

3. Explain the power of Court to release offenders after admonition and on probation of good conduct under the Probation of Offenders Act, 1958.

   நன்னடத்தைச் சட்டம், 1958ன் கீழ் குற்றவாளிகளை கண்டிப்பிற்கு பிறகு விடுதலை செய்யவும் மற்றும் கண்காணிப்பின் பேரில் விடுதலை செய்யவும் உள்ள நீதிமன்ற அதிகாரங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the principle of "Autre fois acquit" and "Autre fois convict".

   "முன் விடுதலை வாதம்" மற்றும் "முன் தண்டனை வாதம்" என்ற கோட்பாட்டினை விளக்குக.

5. Summarize the provisions relating to the trial before a Court of Sessions.

அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை தொடர்பான வகைமுறைகளை சுருக்கமாக கூறவும்.

6. What do you mean by 'Institutionalised reformation'? What are the various institutions involved in the reformation of juvenile?

"நிறுவனம் சார்ந்த சீர்திருத்தம்" என்றால் என்ன? இளஞ்சிறார் சீர்திருத்தத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Summons Case

அழைப்பாணை வழக்கு

(b) Joinder of charges

குற்றச்சாட்டுகளின் சேர்க்கை

(c) Inquest Report

இறப்பு ஆய்வறிக்கை

(d) Case diary

வழக்கு நாட்குறிப்பு

(e) Revision

சீராய்வு

(f) Victim compensation

பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடு

(g) Proclamation

பிரகடனம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' committed murder in Chennai, absconded and afterwards he was caught at Madurai. Decide the place of trial.

'A' என்பவர் சென்னையில் கொலைக் குற்றம் செய்து தலைமறைவாகிறார். பின்னர் அவர் மதுரையில் பிடிபடுகிறார். எவ்விடத்தில் வழக்கை நடத்த முடியும்? தீர்வு காண்க.

9. 'A', was convicted for an offence of murder and was awarded death sentence. He wants to appeal on the ground that he was a juvenile when he committed the crime. Advise.

'A', என்பவர் கொலைக் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு மரண தண்டனையும் பெற்றார். அவர் குற்றம் செய்தபொழுது இளஞ்சிறாராய் இருந்தார் என்ற அடிப்படையில் மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். ஆலோசனை வழங்குக.

10. 'A' pleads guilty in a case, before the Court of Sessions. He is willing to prepare an appeal against conviction. Advise him.

'A' என்பவர் அமர்வு நீதிமன்றத்தின் முன் குற்றத்தை ஏற்று வழக்கை முடிக்கிறார். அவர் அத்தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். அறிவுரை கூறுக.

---

Register No. | | | | | | | | |

**TA5C** **7189–26**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

ENVIRONMENTAL LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically analyse the environmental policies in India.

   இந்தியாவில் சுற்றுப்புறச்சூழல் குறித்த கொள்கைகளை திறனாய்வு செய்க.

2. State the remedies available for environmental pollution under the Civil Procedure Code, 1908.

   1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் சுற்றுப்புறச்சூழல் மாசுக்குண்டான தீர்வழிகளைக் கூறுக.

3. Explain the importance of the Wildlife (Protection) Act, 1972 in the present context.

   நிகழ் சூழலில் வன உயிர்கள் பாதுகாப்புச் சட்டம் 1972ன் முக்கியத்துவத்தை விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the sources of noise pollution and its effects? Explain the rules to combat noise pollution.

   ஒலி மாசின் ஆதாரங்கள் மற்றும் விளைவுகள் யாவை? ஒலி மாசை நீக்குவதற்கான விதிகளை விளக்கவும்.

5. Polluter Pays Principle is an essential feature of Sustainable Development– Comment.

   மாசுக் கேடு விளைவிப்பவரே இழப்பீடு செலுத்தும் கோட்பாடு நீடித்த வளர்ச்சியின் முக்கிய சாராம்சமாக விளங்குகின்றது – விமர்சிக்கவும்.

6. Describe the procedure adopted by the government in protecting Biological Diversity.

'பல்லுயிர் பெருக்கம்' பாதுகாப்பிற்கு அரசு கையாளும் நடைமுறைகளை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Green Tribunal

பசுமை தீர்ப்பாயம்.

(b) Public Nuisance.

பொதுத்தொல்லை.

(c) Reserve Forests.

ஒதுக்கப்பட்ட காடுகள்.

(d) E-Waste.

மின்னணு-கழிவு.

(e) Nairobe Declaration.

நைரோபி உடன்படிக்கை.

(f) Earth Summit.

புவி உச்சி மாநாடு.

(g) Mass Tort Actions.

கூட்டு தீங்கு வழக்கு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' illegally trades sea turtles in his pet shop. Turtles are considered to be lucky and therefore many bought turtles as hobby. 'Animals Watch' an activist group sought closure of the pet shop on the ground that trading turtle is illegal and filed a case – Decide.

'அ' தனது செல்லப்பிராணி விற்பனையகத்தில் சிறிய கடல் ஆமைகளை சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்தார். சிறிய கடல் ஆமைகள் அதிர்ஷ்ட்டத்தை தருவதாக நம்புவதால் பலர் இதனை பொழுது போக்கிற்காக வாங்கினர். 'விலங்குகள் கண்காணிப்பகம்' என்ற ஆர்வலர் குழு ஆமைகளை விற்பது சட்டத்திற்கு முரணான செயல் எனக் கூறி செல்லப்பிராணி விற்பனையகத்தினை மூட வேண்டும் என்று வழக்கிட்டனர் – தீர்மானிக்கவும்.

9. Government Environmental Agency found high level of toxic pesticides in artificial drink of a famous soft drink company. It was reported in news. The soft drink company filed a case against the environmental agency on the ground that it violates their rights – Decide.

அரசு சுற்றுப்புறச்சூழல் முகவாண்மை ஒரு புகழ்வாய்ந்த மென்பான நிறுமத்தின் தயாரிப்பு பானங்களில் அதிக அளவில் நச்சுத் தன்மை வாய்ந்த பூச்சிக் கொல்லி மருந்து இருப்பதாக அறிந்து அதனை நாளிதழில் செய்தியாக வெளியிட்டது. இவ்வெளியீடு தங்கள் உரிமைகளை மீறுவதாகக் கூறி அரசு சுற்றுப்புறச்சூழல் முகவாண்மையை எதிர்த்து அந்த நிறுமம் வழக்கிட்டது – தீர்மானிக்கவும்.

10. The Government of Orissa allotted a portion of land from a zoological garden for the construction of a five star hotel. A Public Interest Litigation was filed on the ground that the Government's decision violates the provisions of the Forest Act. Decide.

ஒரிஸ்ஸா அரசு உயிரியியல் பூங்காவின் ஒரு பகுதி நிலத்தினை ஐந்து நட்சத்திர விடுதி கட்டுவதற்காக ஒதுக்கியது. அரசின் இந்த முடிவு காடுகள் சட்டத்தினை மீறுவதாகக் கூறி பொது நல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்கவும்.

---

Register No. [ | | | | | | | | ]

**TA5D** **7190-26**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

(Three – year Regular Course)

Third Year – Fifth Semester

LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the appointment, powers and functions of the Commissioner under the Employee's Compensation Act, 1923.

   தொழிலாளர் இழப்பீடுச் சட்டம் 1923-ன் கீழ் ஆணையரின் நியமனம், பணிகள் மற்றும் அதிகாரங்களை விளக்குக.

2. Explain the benefits available to an employee under the Employees' State Insurance Act, 1948.

   தொழிலாளர் அரசு காப்பீடுச் சட்டம் 1948-ன் கீழ் தொழிலாளி ஒருவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் நலன்களை விவரிக்கவும்.

3. Discuss the provisions of the Factories Act, 1948 relating to Health and Safety of workers.

   1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த சட்ட வகையங்களை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the benefits available to the pregnant woman under the Maternity Benefit Act, 1961?

   1961-ம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டத்தின் படி ஒரு கர்ப்பிணிக்கு கிடைக்கும் நலன்கள் யாவை?

5. Explain the nature and scope of the Employee's Provident Fund and Miscellaneous Provisions Act, 1952.

1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் வகையங்கள் சட்டத்தின் தன்மை மற்றும் நோக்கெல்லையை விளக்குக.

6. State the kinds of Bonus. Write a note on full bench formula on bonus.

மீதூதியத்தின் வகைகளை எடுத்துரைக்க மற்றும் மீதூதியம் குறித்த முழு ஆய வழிகாட்டுதல் பற்றி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Constitutional perspectives of social security

சமூகப் பாதுகாப்பு குறித்த அரசமைப்புக் கண்ணோட்டம்

(b) Occupational diseases

தொழிற்சார்ந்த நோய்கள்

(c) Set on and set off

ஒதுக்கி வைத்தல் மற்றும் எதிரீடு செய்தல்

(d) Eligibility for Gratuity

பணிக்கொடை பெறுவதற்கான தகுதி

(e) Employees' Deposit Linked Insurance Scheme, 1976.

தொழிலாளர் வைப்புத் தொகையுடன் இணைந்த காப்பீட்டுத் திட்டம், 1976.

(f) Working hours in Factories

தொழிற்சாலைகளில் வேலை நேரம்

(g) Applicability of Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் அளாவுகை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Sampath, a heart patient, was employed as an electrician in a factory. Because of short circuit, fire broke out in the factory. To put out the fire, Sampath ran up the stairs to disconnect the electrical main connections. During the process he collapsed and died in a cardiac arrest. Decide whether his dependents can claim compensation.

இதய நோயாளியான சம்பத் என்பவர் எலக்ட்ரீஷியனாக தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்தார். தொழிற்சாலையில் ஏற்பட்ட மின் கசிவினால் நெருப்பு பிடித்து விட்டது. நெருப்பை அணைக்கும் முயற்சியால் சம்பத் பலபடிகள் ஏறி மின்சாரத்தின் முக்கிய இணைப்பை துண்டிக்க சென்றார். அப்போது இதயத் துடிப்பு நின்று இறந்து விட்டார். அவரை சார்ந்திருப்பவர்கள் இழப்பீடு பெற முடியுமா?

9. Ramu is employed in a factory as manager. After seven years of service, he voluntarily resigns his service. His last drawn wages is Rs. 20,000/- per month. He claims gratuity. Decide his claim and calculate the gratuity amount.

ராமு என்பவர் ஒரு தொழிற்சாலையில் மேலாளராக பணிபுரிகிறார். ஏழு ஆண்டுகளுக்கு பணி செய்த பிறகு, தன் விருப்பத்தின் பேரில் பணியிலிருந்து விலகுகிறார். அவருடைய கடைசி மாதச் சம்பளம் ரூ.20,000/-. ராமு பணிக்கொடையை கோருகிறார். அவருடைய கோரிக்கையை முடிவு செய்து, பணிக்கொடை தொகையை கணக்கிடுக.

10. Karthick, is employed as a clerk in a factory. Due to misappropriation of factory assets, he was terminated from service on June 2024. He claims bonus for the accounting year 2024-25. But the factory management refused. Decide.

கார்த்திக் என்பவர் ஒரு தொழிற்சாலையியல் எழுத்தராக பணிபுரிந்து வருகிறார். அவர் தொழிற்சாலை சொத்துகளை கையாடல் செய்ததற்காக ஜூன் 2024-ல் பணி நீக்கம் செய்யப்படுகிறார். அவர் 2024-25 கணக்காண்டிற்கான மீதூதியம் கோருகிறார். தொழிற்சாலை நிர்வாகம் தர மறுக்கிறது. தீர்வு காண்க.

Register No. | | | | | | | | |

**TA5E** **7191–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Enumerate Adam Smith's Canons of Taxation and its applicability in Indian Tax System.

ஆடம் ஸ்மித்தின் வரி கட்டளைகளை எடுத்துரைத்து இந்திய வரியமைப்பில் அதன் பயன்பாட்டை விளக்கவும்.

2. Explain the chargeability and computability of income from house property under the Income Tax Act, 1961.

வருமான வரிச்சட்டம், 1961-ன் கீழ் வீட்டு சொத்திலிருந்து வரும் வருமானத்தின் வரி விதிக்கத்தக்க மற்றும் கணிப்பிடு தன்மை குறித்து விளக்குக.

3. "Dual GST procedure paves way for co-operative federalism" - explain with tax levy and collection procedure under CGST, 2017 and TNGST, 2017.

"இரட்டை வரிமுறை கூட்டுறவு கூட்டாட்சிக்கு வழிவகுக்கும்" - இதனை சிஜிஎஸ்டி, 2017 மற்றும் டிஎன்ஜிஎஸ்டி, 2017ன் கீழுள்ள வரி விதிப்பு மற்றும் வசூல் முறையுடன் விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Elucidate the hierarchy and powers and Income tax authorities.

வருமான வரித்துறை அதிகாரிகளின் படிநிலை மற்றும் அதிகாரங்களை விளக்குக.

5. Explain the test of residence for the taxable entities under the Income Tax Act, 1961.

வருமான வரிச்சட்டம், 1961-ன் கீழ் வரி விதிக்கக்கூடியவர்களுக்கான குடியிருப்பு தேர்வு முறையை விளக்குக.

6. Explain the role of Letter of Credit in export and import of goods.

சரக்குகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் நம்பிக்கை நாணய கடிதத்தின் பங்களிப்பை விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Set off and carry forward

சரிக்கட்டுதல் மற்றும் முன்னெடுத்து செல்லுதல்

(b) House Rent Allowance

வீட்டு வாடகைப் படித்தொகை

(c) Input Tax Credit

உள்ளீட்டு வரிக்கடன்

(d) Kinds of Taxes

வரிகளின் வகைகள்

(e) Types of Import

இறக்குமதியின் வகைகள்

(f) Capital and Revenue Receipts

மூலதன மற்றும் வருவாய் ரசீதுகள்

(g) Black money

கறுப்புப் பணம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Brett Lee, an Australian Cricket player visits India for 100 days in every financial year for the past 10 financial years. Find out his residential status for the assessment year 2025-26.

ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த பிரட்லீ என்ற கிரிக்கெட் வீரர், கடந்த 10 நிதியாண்டுகளில், ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்கள் இந்தியாவில் தங்குவதை வழக்கமாக கொண்டிருந்தார். வரிவிதிப்பு ஆண்டான 2025-26-ல் அவரது குடியிருப்பு நிலையை கண்டறிக.

9. The following are the particulars of Mr. Rajan who is employed in Chennai.

(a) Basic Salary Rs. 5000 p.m.

(b) DA (60% of Basic Salary)

(c) Professional Tax paid - Rs. 550

(d) House Rent Allowance Rs. 450 p.m. (Rent paid Rs. 500 p.m.)

Calculate taxable salary income in the assessment year 2025-26 under old regime.

சென்னையில் பணிபுரியும் திரு. ராஜன் என்பவரின் விவரங்கள் பின்வருமாறு.

(அ) அடிப்படை சம்பளம் மாதந்தோறும் ரூ. 5,000/-

(ஆ) அகவிலைப்படித்தொகை (அடிப்படை ஊதியத்தில் 60%)

(இ) செலுத்திய தொழிற்வரி - ரூ. 550/-

(ஈ) வீட்டு வாடகை படித்தொகை மாதந்தோறும் ரூ. 450 (மாதந்தோறும் செலுத்திய வாடகை ரூ. 500/-)

வரி விதிப்பு ஆண்டு 2025-26ல் பழைய வரிவிதிப்பு முறைபடி வரிவிதிக்கத்தக்க சம்பள வருமானத்தை கணக்கிடுக.

10. Mrs. ABC acts a referee in a Basket Ball match organised by Sports Authority of India. She has also acted as a referee in another charity Basketball organized by local sports club, in lieu of a lumpsum payment. Discuss whether she is required to pay any GST?

இந்திய விளையாட்டு துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட கூடைப்பந்து போட்டியில் திருமதி. அஆஇ நடுவராக கலந்து கொண்டார். உள்ளூர் விளையாட்டு சங்கம் ஏற்பாடு செய்த மற்றொரு கூடைப்பந்து போட்டியில் நடுவராக இருந்து ஒட்டுமொத்த தொகையை பெற்றார். அவர் GST (ஜிஎஸ்டி தொகை) செலுத்த கடப்பாடு உடையவரா? விளக்குக.

---

Register No. | | | | | | | | |

**TA5G** **7376–26**

(For the candidates admitted from 2022 – 2023 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA, 2023.

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words of each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the procedure for registration of FIR under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 including zero FIR and e-FIR.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழ் பூஜ்ய மற்றும் மின்னணு முதல் தகவல் அறிக்கை உட்பட, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான நடைமுறைகளை விளக்குக.

2. Explain the different kinds of trials under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழ் உள்ள பல்வேறு விதமான வழக்கு விசாரணைகளை விளக்குக.

3. Discuss the concept of plea bargaining under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 and its relevance in speedy justice.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழுள்ள குற்றப்பேரம் என்ற கருத்தினையும், விரைவாக நீதி வழங்குவதில் அதன் முக்கியத்துவத்தினையும் விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Write a note on the Penal jurisdiction of criminal courts under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

   பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் 2023ன் கீழ் உள்ள குற்றவியல் நீதிமன்றங்களின் தண்டனை அதிகார வரம்பினைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

5. What is a judgment? What procedures need to be followed while pronouncing a judgment?

தீர்ப்பு என்றால் என்ன? தீர்ப்பை அறிவிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவை?

6. Explain the procedure prescribed under the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 for executing a death sentence.

பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023ன் கீழ் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Acquittal and discharge

விடுதலை மற்றும் விடுவிப்பு

(b) Bail

பிணை

(c) Complaint

புகார்

(d) Duties of Public Prosecutor

அரசு குற்றவியல் வழக்கறிஞரின் கடமைகள்

(e) Inquest Report

இறப்பு ஆய்வறிக்கை

(f) Free Legal-aid

இலவச சட்ட உதவி

(g) Revision.

சீராய்வு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A magistrate of the first class grants pardon to an accomplice at the stage of investigation. Decide its validity.

ஒரு முதல் நிலை நீதித்துறை நடுவர் அவர்கள், ஒரு உடன் குற்றவாளிக்கு புலன் விசாரணையின் போது மன்னிப்பு அளிக்கிறார். அதன் செல்லுந்தன்மையை தீர்மானிக்கவும்.

9. A police officer investigates an offence without prior order from the magistrate. Decide.

ஒரு காவல் அதிகாரி நீதித்துறை நடுவரின் முன் அனுமதி பெறாமல் ஒரு புலன்விசாரணையை மேற்கொள்கிறார். தீர்மானிக்கவும்.

10. 'A' was sentenced by a High Court in an extraordinary original jurisdiction to undergo six months imprisonment. 'A' wants to file an appeal against this order. Advise him.

தனிப்பட்ட அசல் ஆள்வரையில் ஒரு உயர் நீதிமன்றம் 'அ' என்பவருக்கு ஆறு மாதம் சிறை தண்டனை அளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து 'அ' என்பவர் மேல் முறையீடு செய்ய விரும்புகிறார். ஆலோசனை வழங்கவும்.

———————